கண்டிராத ஒரு நெஞ்சுதுக்கம் ஏற்படிருக்கிறதே!

படன்- அத்யுக்ரதீப்திவிசத:ஸமரேக்ரகண்ய:
சௌர்யம் ச ஸம்ப்ரதி ஸசோகமுபைதி தீமான்!
பிராப்தே நிதாகஸமயே கனராசிருத்த:
ஸூர்ய ஸ்வபாவ ருசிமானிவ பாதிகர்ண: !! (சுலோ:4)

* பாரதீயம் விருத்தம், V.S.வேங்கடராகவாச்சாரியார், K.S.V. Peetham, Tirupati, Year-1968.

(பொருள்) ''பெருந்தீப்பிழம்பு போல் ஒளிரும் புகழைப்பெற்றவனும், போரில் முதலில் நிற்கும் ஆற்றலைப்பெற்றவனும், அறிவாளியும், ஆன கர்ணன் சொல்லொணாத்துயரத்தையும் தனதுட்கொண்டிருப்பினும் வெயில் காலத்திய சூர்யனின் சுட்டெரிக்கும் தன்மையை தான் இயல்பாகவே கொண்டவனாயும் கர்ணன் விளங்குகின்றான்'' என்கிறான் படன்.

கர்ணன் - சல்லியனிடம்,

அன்யோன்ய சஸ்த்ரவினிபாத நிக்ருத்தகாத்ர-
யோதாச்வ வாரணரதேஷு மஹாஹவேஷு !
குருத்தாந்தக பிரதிம விக்கிரமிணோ மமாபி
வைதுர்யமாபததி சேதஸி யுத்தகாலே !! (சுலோ: 6)

(பொருள்) ''காலாட்படை, குதிரைப்படை, யானைப்படை, தேர்ப்படைகளோடு ஒன்றையொன்று பொருதிய பெரும்பேரில் ஒருவரை ஒருவர் ஆயுதங்களால் போர்புரிந்து வெட்டுப்பட்ட உடல்களையும் காண்கின்ற போழ்து, சினமுற்ற யமனையொத்த வீரனாயினும் எனக்கே நெஞ்சில் யுத்தம் செய்யவேண்டாம் என்ற தீனஸ்வபாவம் யுத்தகால்த்தில் பிறக்கின்றது'' என்று தன் நிலைமை சல்லியனிடம் கர்ணன் உரைக்கின்றான்.

கர்ணன் - சல்லியனிடம்,

கிருத்தே வஜ்ரமுகேன நாமகிருமினா தைவான் மமோருதுவயே
நித்ராச்சேதபயாத் அஸஹ்யத குரோர் தைர்யாத் ததா வேதனா
உத்தாய க்ஷதஜாப்லுத: ஸ ஸஹஸா ரோஷானலோத்தீபிதோ
புத்வா மாம் ச சசாப காலவிபலானி அஸ்த்ராணி தே ஸன்த்விதி !!

(பொருள்) ஒரு சமயம் பரசுராமர் என்மடி மீது தலையை வைத்துக் கண்ணயர்ந்திருந்தார். அப்போழுது வஜ்ரமுகம் என்னும் பூச்சியால் என் தொடைகள் இரண்டும் குடைந்து விரணமாக்கப்பட்டன. குருவிற்கு உறக்கத் தடையேற்படும் என்றெண்ணிய நான் தைர்யத்தோடு அவ்வேதனனயை ஏற்றுக்கொண்டேன். உறக்கம் விட்டெழுந்த அவர், பூச்சியினால் ஏற்பட்ட குடைவினனப் பொருட்படுத்தாது இருக்கும் இருப்பு க்ஷத்திரியருக்குத் தான் உண்டெனவறிந்து, உரோடத் தீயாகிற கோபத்தால் 'இவ்வஸ்திரங்கள் (பொய்சொன்ன காரணத்தால்) உனக்கு காலத்தில் பயனற்றதாக ஆகட்டும் என்று பரசுராமர் சாபமிட்டார்' எனத் தெரிவித்தான்.

கர்ணன் - சல்லியனிடம்,

ஹதோபி லபதே ஸ்வர்கம் ஜித்வா து லபதே யச: !
உபே பகுமதே லோகே நாஸ்தி நிஷ்பலதா ரணே!! (சுலோ: 12)

(பொருள்) செத்தால் சுவர்க்கம் கிடைக்கும். வென்றால் புகழ் கிடைக்கும். இரண்டும் உலகத்தில் ஏற்புடையதே. போரில் நிஷ்ப்பலமான தர்மமே கிடையாது' என்றும் 'கோ பிராம்மணர்கள், பதிவிரதைகள், போர்களத்தில் மேல்மட்டவீரர்கள் ஆகியோருக்கும், காலம் கைகூடி வந்துள்ள எனக்கும் அக்ஷயம் (அழிவற்ற நிலை) உண்டாகட்டும்' என்றும் கூறி போர்க்களம் புகுந்தான். அப்போது-

இந்திரன்- (பிரம்மணவேஷம் பூண்டு) கர்ணா! 'ஒரு பெரிய பிக்ஷையை வேண்டுகிறேன்' என்றான்.

கர்ணன் - இந்திரனை வணங்குகிறான்.

இந்திரன்- (வணக்கம் செலுத்தியவனுக்கு ஆசியுரை செய்யவேண்டும். 'நீடுழி வாழ்க' என ஆசிவழங்குவது மரபு. ஆசீர்வதித்தால் அப்படியே ஆகிவிடும். அது விருப்பமில்லை. ஆசியுரை செய்யாமல் சும்மனே இருந்துவிட்டால் தன்னை மூடன் என அறிந்துகொள்வான். ஆதலால் இதனை விட்டு) கர்ணா! சூரியன், இமவந்தன், கடல் ஆகியன போல் என்றும் நிலையாய் நிற்கட்டும் உனது புகழ் என ஆசிபகர்ந்தான்.

கர்ணன் - இந்திரனிடம் (அவரது மனப்பாங்கினை அறிந்தவராய்)

தர்மோ ஹி யத்னைன: புருஷேண ஸாத்யோ
புஜங்கஜிஹ்வா சபலா ந்ருபச்ரிய:
தஸ்மாத் ப்ரஜாபாலன மாத்ரபுத்யா
ஹதேஷு தேஹேஷு குணா தரந்தே (சுலோ: 17)

(பொருள்) பல்வேறுவகை முயற்சிகளைக்கொண்டு புருஷனால் தர்மம் ஸாதிக்கப்படவேண்டும். ஏனெனில்: ராஜ்யலக்ஷ்மியானது பாம்பின் நாக்குபோல் சபலமனப்பான்மை உடையது. இருப்பினும் மக்களைக் காப்பாற்றும் அறிவுமட்டும் இருந்ததாகில் கொல்லப்பட்ட உடலின் நின்றும் குணங்களைக்கண்டு கொள்வார்கள்' என்று கூறி, தமக்கு என்ன வேண்டும்? என்ன கொடுக்கட்டும்? எனவும் கேட்டான்.

இந்திரன் - ஒரு பெரிய பிக்ஷையை வேண்டுகிறேன்.

கர்ணன் - பெரிய பிக்ஷையையே கொடுக்கிறேன். பொன்னால் அணி செய்யப்பட்ட ஆயிரம் பசுக்களைக் கொடுக்கிறேன்.

இந்திரன் - ஆயிரம்பசுக்களா! சில காலம் பால் குடிப்பதற்காக மட்டுமே அவை (பயன்படும், ஆதலால்) வேண்டாம் கர்ணா! வேண்டாம்.

கர்ணன் - வேண்டாமா! சூர்யனின் குதிரைகளைப்போல் அதிவிரைவாய்ச் செல்லும் ஆயிரமாயிரம் குதிரைகளை கொடுக்கிறேன்.

இந்திரன்- குதிரையா! அதன் மேல் ஏறி சவாரி செய்யலாம் அவ்வளவே; வேண்டாம் கர்ணா! வேண்டாம்.

கர்ணன் - வேண்டாமா! அப்படியானால் மேக கம்பீரத்துவனியுள்ள யானைக் கூட்டத்தைக் கொடுக்கிறேன்

இந்திரன்- ஆனையா ஒரு வேளை அதன் மேல் அமர்ந்து செல்லாம் அவ்வளவே வேண்டாம் கர்ணா! வேண்டாம்.

கர்ணன் - வேண்டாமா! போகட்டும் விரும்பியமட்டில் பொன்னைத் தருகிறேன்.

இந்திரன்- ஆம், என்றவாறே எடுத்துக்கொண்டு போகிறேன் (சிறிது தூரம் போய் திரும்பி வந்து) வேண்டாம் கர்ணா! வேண்டாம்

கர்ணன்- அப்படியானால் பூமியையே வெட்டிக் கொடுக்கிறேன்.

இந்திரன்- பூமியை வைத்துக்கொண்டு என்ன செய்வது?

கர்ணன்- அப்படியானால் எனது அக்னிஷ்டோம வேள்விப்பயனைக் கொடுக்கின்றேன்.

இந்திரன்- அக்னிஷ்டோமப் பயனால் என்ன ஆகும்?

கர்ணன்- அப்படியானால் என்னுடைய தலையை தருகிறேன்.

இந்திரன்- அய்யோ! அய்யோ!

கர்ணன்- பயப்படாதீர்கள்! பயப்படாதீர்கள்!

அங்கை ஸஹைவ ஜனிதம் மம தேஹரக்ஷா
தேவாசுரைரபி ந பேத்யமிதம் ஸஹஸ்ரை:
தேயம் ததாபி கவசம் ஸஹ குண்டலாப்யாம்
ப்ரீத்யா மயா பகவதே ருசிதம் யதிஸ்யாத் (சுலோ: 21)

(பொருள்) என் உடலோடே கூடப்பிறந்ததும், என்னுடைய உடற்காப்பாகவும் ஆயிரக்கணக்கான தேவாசுரர்களின் அஸ்த்திரத்தாலும் உடைக்க இயலாததும் இந்த காப்பணியுடன் சேர்ந்து குண்டலம் பொருந்திய கடிப்பிணைகளையும் தாங்களுக்கு வேண்டுமாகில் கொடுக்கிறேன்.

இந்திரன்- கொடு! கொடு!

கர்ணன்- இதுவே இவனுக்கு வேண்டியதாயிற்று. (தனக்குள்) இது பெரும் கபடபுத்தி கற்பிக்கும் ஸ்ரீகிருஷ்ணனின் சூழ்ச்சியாக இருக்கலாமோ? என எண்ணியவனாய், அப்படியாயினும் ஆகட்டும் செய்ததைக் குறித்து சிந்திக்கக்கூடாது. (வெளிப்படையாக) இதோ எடுத்து கொள்ளுங்கள்.

சல்லியன்- அங்கராஜ! கொடுக்க வேண்டாம்! கொடுக்க வேண்டாம்! என்று தடுக்கிறான்.

கர்ணன்- சல்லிய மஹாராஜனே! தடுத்தது போதும்! பார்!

சிக்ஷா க்ஷயம் கச்சதி காலபர்யயாத்
சுபத்தமூலா: நிபதந்தி பாதபா:!
ஜலம் ஜலஸ்தான கதம் ச சுஷ்யதி
ஹுதம் ச தத்தம் ச ததைவ திஷ்ட்டதி!! (சுலோ: 22)

(பொருள்) கர்ணன் கொடுக்க நீட்டிய கையினைப் பின் இழுப்பதில்லை. கவச குண்டலங்களைத் தாரைவார்த்துக்கொடுக்க முன்வருங்கால் சல்லிய மஹாராஜன் தடுத்தபோதிலும் கர்ணன் தெளிவாக ஒரு செய்தியை ஆங்கே தெரிவிக்கின்றான். 'காலத்தின் கோலத்தால் கல்வியும் கூட அழிந்து விடலாம். நன்றாய் வேரூன்றிய மரமும் ஒருநாள் விழுந்துபடும். நீரும் நீர்த்தடமும் கூட வற்றிவிடலாம். ஆனால் ஆகுதியாகக் கொடுத்ததும், தானமளித்ததும் என்றுமே அழியாமல் நிலைத்து நிற்கும்' என்கிறான்.

கர்ணன்- இந்திரனால் நான் வஞ்சிக்கப்பட்டேன் என்கிறான்.

தேவதூதன்- இந்திரனால் அளிக்கப்பெற்ற விமலை எனும் சக்தி அஸ்திரத்தை கர்ணனிடம் அளிக்கிறான். அதைப்பெறாத அவனிடம் 'இந்த அமோகமான அஸ்திரம் பாண்டவர்களுள் ஒரு புருஷரை வதம் செய்ய உதவும்' எனக்கூற, கர்ணன் அதனைப் பெறுகின்றான். அவ்வேளையில் அர்சுனனின் சங்கு முழங்கின்றது. சங்கத்துவனி கேட்டு பிரம்மதேவனுக்கு மரியாதை செலுத்தும் வகையில் ரதத்திலிருந்து கீழே இறங்கியிருந்த கர்ணன் ரதமேறி 'சல்லியராஜனே! அர்சுனனிருக்கும் பகுதிநோக்கி தேரை ஓட்டு' என்று சொல்லி அர்சுனனோடு போர் செய்யப் புறப்பட்டான்.

(பரதவாக்கியம்)

எல்லாவிடத்திலும் ஐச்வர்யம் பெருகட்டும். எப்போதுமே விபத்துகள் ஒழியட்டும். அரசன் அரசகுணத்தோடு இந்த பூமியை ஆண்டு வரட்டும்.

கர்ணபாரம் முற்றியது.



துணைநூல்கள்: கர்ணபாரம், பிரபுத்த கர்ணாடகா.

விநாயகர் அகவல் பதிப்பில் காணப்படும் மாறுபாடு



த. ம. சரபோஜி

என்கிற

மணி. மாறன்,

M.A.,(T),M.A.,(H),B.L.I.S.,Dip.in Sanskrit.,(Ph.D)

தமிழ்ப் பண்டிதர்.



சரசுவதி மகால் நூலகத்தில் உள்ள சுவடியின் முதல் ஏடு

விநாயகர் அகவல் பதிப்பில் காணப்படும் மாறுபாடு

த. ம. சரபோஜி
என்கிற
மணி. மாறன், M.A.,(T),M.A.,(H),
B.L.I.S.,Dip.in Sanskrit.,(Ph.D)
தமிழ்ப் பண்டிதர்.

ஆதியுலாவினை சிவபெருமான் உறையும் கயிலாயத்தில் அரங்கேற்றம் செய்யும் பொருட்டு குதிரை மீதேறி சேரமான் பெருமான் நாயனாரும், வெள்ளானை மேலேறி சுந்தரமூர்த்தி நாயனாரும் செல்கின்றனர். செல்லும் வழியில் சேரமான் பெருமான் ஒளவையாரை அழைக்காமல் வந்துவிட்டோமே என்று எண்ணுகிறார். அவர் எண்ணிய உடனே விநாயகரை பூசித்துக்கொண்டிருந்த ஒளவையாரின் மனதில் இச்செய்தி தெரிந்து, தானும் அவர்களுடனே கயிலைக்குப் போக விருப்பம் கொண்டு விநாயகர் பூசையை வேகவேகமாக செய்ய ஆரம்பித்தார். அதனைக் கண்ட பிள்ளையார், ஒளவையாரைப் பார்த்து நீங்கள் நியமப்படி பூசை செய்யுங்கள், நான் உங்களை அவர்களுக்கு முன்னதாகவே கயிலாயம் கொண்டு சேர்க்கிறேன் என்று கூற, ஒளவையாரும் அவ்வாறே பூசை செய்து முடித்தார். உடனே விநாயகர் தன் துதிக்கையால் எடுத்துவிட ஒளவையார் கயிலாயத்தை அடைந்தார். தங்களுக்கு முன்னரே கயிலை வந்தடைந்த ஒளவையைக் கண்டு சேரமான் பெருமான் ஆச்சரியம் அடைந்தார்.

ஒளவையார் விநாயகரைப் போற்றிப் பாடிய அகவலே விநாயகர் அகவல் என்று போற்றப்பெறுகின்றது. இப்பாடல் எழுபத்து நான்கு அடிகள் கொண்ட நிலைமண்டல ஆசிரியப்பாவால் அமைந்துள்ளது. அகவல் என்ற சொல்லுக்கு அழைத்தல் என்னும் பொருள் உண்டு. திருவருள் புரியுமாறு வேண்டி விநாயகரைப் பரவிப் பணிந்து அழைத்தல் என்றும் பொருள் கொள்ளலாம்.

தொன்றுதொட்டு நம் நாட்டில் விநாயகர் வழிபாடு நடைபெற்று வருகின்றது. இவ்வழிபாட்டை மேற்கொள்பவர்களுக்குத் தோத்திர நூலாக விளங்கிவருவது விநாயகர்

அகவலே ஆகும். இத்தகு நூல் சுவடி வடிவிலிருந்து அச்சுநூலாகப் பதிப்பிக்கப்பெற்று இன்றைக்கு ஏறக்குறைய இருநூறு ஆண்டுகள் ஆகியிருக்கலாம்.

கி. பி. 1854ஆம் ஆண்டு நல்லூர் ஆறுமுக நாவலரவர்கள் சிதம்பர சைவப்பிரகாச வித்தியாசாலைத் தரும பரிபாலகர் பொன்னம்பலம் பிள்ளையால் சென்னை வித்யாநுபாலனயந்திர சாலையில் அச்சில் பதிக்கப்பெற்று வெளிவந்த விநாயகர் அகவலை அடிப்படையாகக் கொண்டே, தொடர்ந்து 1939ஆம் ஆண்டு சென்னை, திருவொற்றியூர் டி.ஆர்.பாலகிருஷ்ண முதலியார் அவர்களால், கலைமகள் விலாச பிரஸில் பதிப்பிக்கப் பெற்ற நூலும், 1988ல் திருவாவடுதுறை ஆதீனம் வெளியிட்ட பதிப்பிலும், 2002ல் தஞ்சாவூர், மானம்புச்சாவடி, அருள்மிகு கற்பகவிநாயகர் திருக்கோயில் சிவனடியார்கள் வார வழிபாட்டுக்குழு வெளியிட்ட பதிப்பிலும், மேலும் பல பதிப்புக்களிலும் பாடலடிகள் ஒன்றாகவே காணப்படுகின்றன. மூலச்சுவடியினை ஒப்புநோக்காமல் முதல் பதிப்பினை அடியொற்றியே அடுத்தடுத்த பதிப்புகள் வெளிவந்துள்ளதைக் காணமுடிகிறது.

தஞ்சாவூர் சரசுவதி மகால் நூலகத்தின் தமிழ்த்துறையில் (எண். 2349) இடம்பெற்றுள்ள விநாயகர் அகவல் சுவடியில், முன்னர் வெளிவந்த அச்சுநூல்களில் இடம்பெறாத நான்கு அடிகள் காணப்பெறுகின்றது. மேலும் பல சொற்களும் அச்சுவடியில் மாறுபட்டுள்ளன. அவைகள் இப்பதிப்பில் அடிக்குறிப்பிட்டுக் காட்டப்பெற்றுள்ளது. இந்நூலகச் சுவடியில் இடம்பெறாமல் அச்சு நூல்களில் மட்டுமே காணப்பெறும் இரண்டு அடிகள் தனியே கீழே கொடுக்கப்பெற்றுள்ளன. முதல் அச்சுநூல் வெளிவந்த பின்னர் மூலச்சுவடியினை ஒப்புநோக்காமல் முதல் நூலினைக் கொண்டே அடுத்தடுத்த பதிப்புகள் வெளிவந்ததே இத்தகு விடுபாட்டிற்கு காரணமாய் இருத்தல் கூடும். முதல் பதிப்பின்போது மூலச்சுவடியில் இவ்வடிகள் சிதைந்து போயிருத்தலும் கூட, அவ்வடிகள் அச்சு ஏற இயலாமல் போயிருக்கக்கூடும்.

இந்நூலகத்தின்கண் உள்ள மூலச்சுவடியினை ஒப்புநோக்கி, 54வது நூலகப் பருவ இதழில் திருந்திய பதிப்பாகப் பதிப்பிக்கப்பெறும் விநாயகர் அகவலானது, விநாயகர் வழிபாடு செய்வோருக்கும், தமிழ் ஆய்வாளர்களுக்கும், புதிதாகச் சுவடியியல் பதிப்பில் ஈடுபடும் மாணவர்களுக்கும் பேருதவி புரியும் என்று நம்புகிறேன்.

ஔவையார் அருளிய விநாயகர் அகவல்

(பிள்ளையார் பேரில் அகவல்)

சீதக் களபச் செழுந்தா மரை×ப்பூம்
பாதச் சிலம்பு பல இசை பாட
காரணத் தண்டை கணைக்கால் சிலம்பும்[1]
பூரணக் கதலியைப் போற்றுடை யழகும்[2]
பொன்னரை ஞாணும் பூந்துகில் ஆடையும்
வன்ன மருங்கில் வளர்ந்தழ கெறிப்பப்
பேழை வயிறும் பெரும்பாரக் கொம்பும்×
வேழ முகமும் வெண்ணுதற்செந் தூரமும்×
அஞ்சு கரமும் அங்குச பாசமும்
நெஞ்சிற் குடிகொண்ட நீல மேனியும்
நான்ற வாயும் நாலிரு புயமும்
மூன்று கண்ணும் மும்மதச் சுவடும்
இரண்டு செவியும் இலங்குபொன் முடியும்
திரண்டமுப் புரிநூல் திகழும்பொன்× மார்பும்
அற்புதம் நின்ற கற்பகக் களிறே !
தற்பரமான சதா சிவங் காட்டி[3]

சொற்பதங் கடந்த துரியமெய்ஞ் ஞான-இது 15ஆவது பாடலடியாக முன்னர் வந்த அச்சுநூல்களில் காணப்பெறுகின்றது.

1, 2, 3 அடிக்குறிப்புள்ள பாடலடிகள் இந்நூலகச் சுவடியில் காணப்பெறுகின்றது. முன்னர் வெளிவந்துள்ள பதிப்புகளில் இவ்வடிகள் காணப்பெறவில்லை.

சொல் வேறுபாடுகள்: ×செழுந்தாமரை-செந்தாமரை, கொம்பும்-கோடும், வெண்ணுதற் செந்தூரமும்-விளங்கு சிந்தூரமும், திகழும் பொன்-திகழ் ஒளி.

முப்பழம் நுகரும் மூஷிக வாகன
இப்பொழு தென்னை ஆட்கொள வேண்டித்
தாயாய் எனக்குத் தானெழுந் தருளி
மாயாப் பிறவி மயக்கம் அறுத்துத்
திருந்திய முதல்ஐந் தெழுத்தும் தெளிவாய்ப்
பொருந்தவே வந்தென் புந்தியிற்× புகுந்து
குருவடி வாகிக் கூறுதல் செய்து×
திருவடி வைத்துத் திறம்இது பொருள் என
வாடா வகைதான் வந்தெனக் கருளி×
கோடா யுதத்தாற் கொடுவினை களைந்தே
உவட்டா வுபதேசம் புகட்டிஎன் செவியில்
தெவிட்டாத ஞானத் தெளிவையும் காட்டி
ஐம்புலன் தன்னை அடக்கும் உபாயம்
இன்புறு கருணையின் இனிதெனக் களித்து×
கருவிகள் ஒடுங்குங் கணக் கறிவித்து×
இருவினை தன்னை அறுத்திருள் கடிந்து
தலம்ஒரு நான்கும் தானெனக் கருளி×
மலம்ஒரு மூன்றின் மயக்கம் அறுத்தே
ஒன்பது வாயில் ஒருமந் திரத்தால்
அன்புறு கதவால்× அடைப்பதும் காட்டி
ஆறா தாரத்து அங்குச நிலையும்
பேறா நிறுத்திப் பேச்சுரை அறுத்தே
இடைபிங் கலையின் எழுத்தறி வித்துக்
கடையிற் சுழிமுனைக் கமலங் குறித்து×
மூன்றுமண் டலத்தின் முட்டிய தூணின்
நான்றுஎழு பாம்பின் நாவில் உணர்த்திக்

சொல் வேறுபாடுகள்: × புந்தியிற்-உளந்தனிற், கூறுதல் செய்து-குவலயந் தன்னில், வந்தெனக் கருளி-மகிழ்ந்தெனக் கருளி, இனிதெனக் களித்து-இனிதெனக் கருளி, கணக்கறி வித்து-கருத்தினை அறிவித்து, தானெனக் கருளி ந்தெனக் கருளி, அன்புறு கதவால்-ஐம்புலக் கதவை, கமலங் குறித்து-கபாலம் காட்டி .

குண்டலி யதனிற் கூடிய அசபை
விண்டெழு மந்திரம் வெளிப்படச் சொல்லி[×]
மூலா தாரத்தின் மூண்டெழு கனலைக்
காலால் எழுப்புங் கருத்தறி வித்தே
அமுத நிலையும் ஆதித்த வாரமும்[×]
குமுத சகாயன் குணத்தையுங் காட்டி[×]
இடைச்சக் கரத்தி னெட்டு[×] நிலையும்
உடற்சக் கரத்தின் உயிர்ப்பையுங்[×] காட்டி
சண்முக தூலமும் சதுர்முக சூக்கமும்
எண்முக மான தோரெண்பத்தோ ரட்சரம்[×]
புரியட்ட காயம் புலப்பட எனக்குத்
தெரிஎட்டு நிலையும் தெரிசனப் படுத்திக்
கருத்தி லிருத்தி கபால வாசல்[×]
இருத்தி முத்தி இனிதெனக் கருளி
என்னை அறிவித்து எனக்கருள் செய்து
முன்னை வினையை முதலே[×] களைந்து
வாக்கும் மனமும் இல்லாமனோலயம்
தேக்கியே என்றன் சிந்தை தெளிவித்து
இருள்வெளி இரண்டுக்கு ஒருவளி யாக்கி[×]
கருவளி வரா கணக்கறி வைத்து[4]
எல்லை இல்லா ஆனந்தம் அளித்து
அல்லல் களைந்தே அருள்வழி காட்டிச்

அருள் தரும் ஆனந்தத்து அழுத்திஎன் செவியில்-இது 63ஆவது பாடலடியாக முன்னர் வந்த அச்சுநூல்களில் காணப்பெறுகின்றது.

சொல் வேறுபாடுகள்: × சொல்லி-உரைத்து, ஆதித்த வாரமும்-ஆதித்தன் இயக்கமும், காட்டி-கூறி, கரத்தினெட்டு-கரத்தின் ஈரெட்டு, உயிர்ப்பையுங்- உறுப்பையுங்,மானதோ ரெண்பத்தோ ரட்சரம்-மாக இனிதெனக் கருளி, கருத்திலிருத்தி கபால வாசல்-கருத்தினிற் கபால வாயில் காட்டி, வினையை முதலே-வினையின் முதலை, ஒருவளியாக்கி-ஒன்றிடம் என்ன,

4. இக்குறியிடப்பட்டுள்ள பாடலடி இந்நூலகச் சுவடியில் காணப்பெறுகின்றது. முன்னர் வெளிவந்துள்ள பதிப்புகளில் இவ்வடி காண்பெறவில்லை.

சத்தத்தி னுள்ளே சதாசிவங் காட்டிச்
சித்தத்தி னுள்ளே சிவலிங்கம் பூட்டி[×]
அணுவிற்கு அணுவாய் அப்பாலுக்கு அப்பாலாய்க்
கணுமுற்றி நின்ற கரும்புள்ளே நாட்டி[×]
வேடமும் நீறும் விளங்க முன்னிறுத்திக்[×]
கூடுமெய்த் தொண்டர் குழாத்துடன் கூட்டி
அஞ்சக் கரத்தின் அரும்பொருள் தன்னை
நெஞ்சக் கரத்தின் நிலை தெளிவைத்துத்[×]
தத்துவ நிலையைத் தந்தெனை ஆண்டருள்[×]
வித்தக விநாயக விரைகழல் சரணே.

சீதக்களபம்-குளிர்ந்த கலவைச் சாந்தணிந்த; செழுந்தாமரைப்பூ- செழுமையான தாமரை மலர் போன்ற; பாதச் சிலம்பு-திருவடிகளில் அணியப்பெற்ற சிலம்புகள்; பல இசைபாட-பலவகை ஓசை கொண்டு ஒலிக்கவும்; காரணத்தண்டை கணைக்கால் சிலம்பும்-கணைக்காலில் அணிந்துள்ள தண்டை எனும் சிலம்பும்; பூரணக் கதலியை-கதலி-வாழைப்பழம்; போற்றுடை யழகும்-மிகுந்த அழகும்; வன்னமருங்கில்-அழகிய இடையில்; பொன் அரைஞாணும்-பொன்னால் செய்யப்பெற்ற அரைக்கொடியும்; பூந்துகில் ஆடையும்-மெல்லிய வெண்பட்டாடையும்.

அழகு வளர்ந்து எறிப்பவும்-கண்டார்க்குப் புதிது புதிதாய் அழகு தோன்றி விளங்கவும்; பேழை வயிறும்-பெட்டி போன்ற வயிறும்; பெரும் பாரக் கொம்பும்-பெரிய பருத்த ஒற்றைக்கொம்பும்; வேழ முகமும் - யானை முகமும்; வெண்ணுதற் செந்தூரமும்- நெற்றியில் விளங்குகின்ற சிவந்த பொட்டும்; அஞ்சு கரமும்-ஐந்து கைகளும்; அங்குச பாசமும்-துதிக்கையில் உள்ள அமிர்த கலசமும், ஓரிரண்டு கைகளில் தங்கிய மோதகமும், ஒடிந்த கொம்பாகிய எழுத்தாணியும் தவிர, வேறிரண்டு கைகளில் விளங்கும் யானைத் தோட்டியும், பாசக் கயிறும் ஆகிய படைக்கலங்களும்.

நான்ற வாயும்-கீழே தொங்குகின்ற வாயும்; நால் இரு புயமும்-நான்கு பெரிய தோள்களும்; மூன்று கண்ணும்-மூன்று கண்களும்; மும்மதச் சுவடும்-கன்னமதம், கை மதம்,

சொல் வேறுபாடுகள்: × சிவலிங்கம் பூட்டி-சிவலிங்கம் காட்டி, கரும்புள்ளே நாட்டி-கரும்புள்ளே காட்டி, விளங்க முன்னிறுத்தி-விளங்க நிறுத்தி, கரத்தின் நிலை தெளிவைத்து-கருத்தின் நிலை அறிவித்து, தந்தெனை ஆண்டருள்-தந்தெனை ஆண்ட.

கோச மதம் ஆகிய மும்மதம் பொழிதலாகிய தழும்பும்; இரண்டு செவியும்-இரண்டு காதுகளும் இலங்கு பொன்முடியும்-தலையில் விளங்குகின்ற அழகிய கிரீடமும்; திரண்ட முப்புரிநூல்-மூன்று புரிகள் சேர்த்து முறுக்கப்பெற்ற பூணூலானது; திகழும் பொன் மார்பும்-விளங்குகின்ற ஒளியுள்ள மார்பும்; நெஞ்சில் குடிகொண்ட-அடியவர்களது நெஞ்சினில் எப்பொழுதும் நிலைத்திருக்கிற. நீலமேனியும்-நீலநிறமுள்ள உடம்பும்.

தற்பரமான சதாசிவங்காட்டி-ஆன்மாவிற்கு அதீதமாகிய சிவத்தைக் காட்டி; அற்புத கற்பகக் களிறே-எவரும் அதிசயிக்கும் வல்லமையுள்ள கற்பக விநாயகக் கடவுளே; முப்பழம் நுகரும்- வாழை, மா, பலா ஆகிய மூன்று கனிகளையும் உண்கின்ற; மூஷிக வாகன - பெருச்சாளியை வாகனமாகக் கொண்டவரே; என்னை - எளியேனை; இப்பொழுது-இச்சமயத்தில்; ஆட்கொள வேண்டி-அடிமையாகக் கொள்ளுதற்கு விரும்பி இந்நிலவுலகில்; எனக்குத் தாயாய்-என்மேல் பேரன்பு செலுத்தும் தாய் போலானவன்.

குருவடிவாகி எழுந்தருளி-அருட்குரவராய் முன்னே தோன்றி; கோடு ஆயுதத்தால்-நின் கையிலுள்ள கொம்பாகிய கருவியால்; கொடுவினை களைந்தும்-உலக இன்பங்களைத் தேடுதலின்றி என்னை நீக்கியும்; திருந்திய முதல் ஐந்தெழுத்தும்-ஒளியோடு விளங்கும் வேத ஆகமங்கள் முதலான வேட்டிப் பிரணவ ஐந்தெழுத்துக்களையும்; என் உளந்தனில் தெளிவாய்ப் பொருந்தவே வந்து புகுந்து-மல இருள் நீங்கிய அருள் ஒளியுடன் என் மனத்தில் தெளிவாய்ப் பதியுமாறு வந்து கலந்தும்; ஐம்புலன் தன்னை அடக்கும் உபாயம்-செவி, மெய், கண், வாய், மூக்கு ஆகிய ஐம்புலன்களையும், ஓசை, ஊறு, ஒளி, சுவை, நாற்றம் என்ற புலன்களில் செல்லாது தடுக்கும் வழியை.

இன்புறு கருணையின் இனிது எனக்கு அளித்து-யான் பேரின்பம் அடைவதற்கு ஏதுவாகிய தனது பேரருளினாலே இனிமையாக எனக்கு அறிவித்தும்; கருவிகள் ஒடுங்கும் கணக்கறிவித்து-நிலம் முதல் நாதம் ஈறாகிய முப்பத்தாறு தத்துவக் கருவிகளும் ஒன்றன்பின் ஒன்றாய் ஒடுங்கிப் பின் தூவெளியிலும், அருளிலும், சிவத்திலும் ஒடுங்கிப் பேரின்பம் அடையும் கருத்தினைத் தெரிவித்தும்;அன்புறு கதவால் அடைக்கும்-அன்பெனும் கதவினால் அடைத்து.

ஒன்பது வாயிலையும்-கண் இரண்டு, காது இரண்டு, மூக்கு இரண்டு, வாய் ஒன்று, குதம் ஒன்று, குறி ஒன்று ஆகிய ஒன்பது உறுப்புக்களின் வழிகளையும்; ஒரு மந்திரத்தால்-ஒப்பற்ற ஓங்கார மந்திரத்தால்; அடைப்பது காட்டியும்-புருடனாகிய சீவன் புறத்தே போகாது

தடுப்பதைக் காண்பித்தும்; ஆறு ஆதாரத்து-மூலாதாரம், சுவாதிட்டானம், மணிபூரகம், அநாதகம், விசுத்தி, ஆக்கிணை ஆகிய ஆறு ஆதாரங்களிலும்; அங்குச நிலையும்-சுழிமுனை வழியே பிராணவாயு செல்லுமாறு யானைத் தோட்டி போல் அதனை அடக்கும் நிலையினையும்; பேறா நிறுத்தி-நிலை பெயராமல் இருக்கச்செய்து; பேச்சு உரை அறுத்து-பேசுகின்ற பேச்சை முற்றிலும் நீக்கி மௌனமாகச் செய்தும்; இடை பிங்கலையின் எழுத்து அறிவித்து-இடைக்கலைக்கு உரிய ஓர் எழுத்து மந்திரத்தையும், பிங்கலைக்கு உரிய ஓர் எழுத்து மந்திரத்தையும் அறிவுறுத்தி.

சுழிமுனை கடையில் காட்டியும்-சுழிமுனை நாடி முடிவில் அடையும் தலை ஓட்டில் உள்ள ஏழாம் சக்கரமாகிய சகஸ்ர சக்கரத்தைக் காண்பித்தும்; மூன்று மண்டலத்தின் முட்டிய தூணின்-சூரியன், சந்திரன், அக்னியாகிய மூன்று மண்டலங்களையும் சேர்ந்துள்ள வீணாத்தண்டிலிருந்து; நான்று எழுபாம்பின்-தொங்குகின்ற பாம்பைப் போன்ற; குண்டலி அதனில் கூடிய அசபை-குண்டலி சக்தியோடு சேர்ந்திருக்கிற; நாவில் உணர்த்தி-நாவில் எழுதி அறிவித்தும்; விண்டு எழு மந்திரம்-வெளிப்பட்டு எழுகின்ற உரைக்கக் கூடிய ஓர் எழுத்து மந்திரத்தை; வெளிப்பட உரைத்தும்-வெளியே எனக்குக் கூறி உணர்த்தியும்.

மூலாதாரத்தில்- ஆறு ஆதாரங்களில் அடிச்சக்கரமாகிய மூலாதாரத்திலிருந்து; மூண்டு எழு கனலை-பற்றி எழுகின்ற விந்து அக்னியை; காலால் எழுப்பும்-பூரக, ரேசக, கும்பக, வாயுக்களினாலே எழுப்பும்; கருத்து அறிவித்தும்-கருத்தை எனக்கு உணர்த்தியும்; இடைச்சக்கரத்தின் எட்டு நிலையும்- சக்கரத்தின் எட்டு நிலையினையும்.

உடற் சக்கரத்தின் உயிர்ப்பையும் காட்டி-உடலாகிய இயந்திரத்திலுள்ள அவயங்கள், ஒன்று வேறு ஒன்றைச் செலுத்தி நிற்கும் நிலையை யான் அறியக் காண்பித்தும்; அமுத நிலையும் - அமுதத்தை ஆக்கும் நிலையினையும்; ஆதித்தன் வாரமும் - சூரியன் இயங்கு தலையும்; குமுத சகாயன் குணத்தையும்-ஆம்பல் பூவிற்குத் தோழனாகிய சந்திரன் குணத்தையும்; கூறியும்-அறிவித்தும்; தூல சண்முகமும்-நீ ஆறுமுகங்களுடன் பருப் பொருளாய் எங்கும் நிறைந்திருக்கும் தன்மையும்; சூக்க சதுர்முகமும்-நீ நான்கு முகங்களுடன் கூடி நுண்பொருளாய் எங்கும் நிறைந்திருக்கும் தன்மையும்; எண்முகமாக-யான் நினைக்கிற முகங்களோடு கூடிய உருவங்களாக; எனக்கு இனிது அருளி-எனக்கு இனிமையாக உரைத்து அருளியும்; புரியட்ட காயம் எனக்குப் புலப்பட-மிக்க நுண்பொருளான உடலின் தன்மை எனக்கு நன்கு விளங்குமாறு; தெரி எட்டுநிலை தெரிசனப்படுத்தியும்-எட்டுத் தொகுதி

உறுப்புகளின் நிலையையும் பிரித்துக் காண்பித்தும் (உடலை ஆக்குவனவாகிய ஸ்தூலபூதம், சூக்குமபூதம், ஞானேந்திரியம் ஐந்து, கன்மேந்திரியம் ஐந்து, அந்தக்கரணம் நான்கு, குண தத்துவம் ஒன்று, மூலப்பகுதி ஒன்று, கலாதி ஐந்து ஆகியவை)

மலம் ஒரு மூன்றின் மயக்கம் அறுத்து-ஆணவம், கன்மம், மாயை என்ற மும்மலங்களின் பிணிப்பை முற்றிலும் நீக்கியும்; மாயாப் பிறவி மயக்கம் அறுத்து- மாயா காரியங்களால் ஆகிய உல்கில் வந்து பிறக்கும் ஆசையை அகற்றியும்; தலம் ஒரு நான்கும் எனக்குத் தந்தருளியும்-நான்கு இடங்களிலும் பெறத்தக்க மெய்ஞ்ஞானத்தை உணர்த்தியருளியும், (சரியையாகிய உருவம், கிரியையாகிய அருவுருவம், யோகமாகிய அருவம், ஞானமாகிய அகண்டவெளி)

சத்தத்தினுள்ளே சதாசிவம் காட்டி-அச்சத்தத்துள் பரந்திருக்கும் சதாசிவ மூர்த்தியை எனக்குக் காண்பித்தும், (அண்டமாகிய உலகில் சூக்கும பூதமாகிய சத்தத்தை இயக்கு); சித்தத்தினுள்ளே சிவலிங்கம் காட்டியும்-அடியார்கள் உள்ளத்தில் நிறைந்து விளங்கும் சிவலிங்கமாகிய சதாசிவ மூர்த்தியைக் காண்பித்தும்; என் செவியில்-என் காதுகளில்; உவட்டா உபதேசம் புகட்டி-இனிய உபதேச மொழிகளை அறிவுறுத்தியும்; தெவிட்டாத ஞானத் தெளிவைக் காட்டியும்-பேரின்பம் அடைவதற்கு ஏதுவாகிய தெளிந்த அறிவை யான் அறியக் காண்பித்தும்; திறம் இது பொருள் என-உறுதியாக நீயே உண்மைப் பொருள் என்று கூறி; திருவடி வைத்து-நின் திருவடிகள் இரண்டையும் என் தலை மீது வைத்துத் தீட்சை செய்து.

வாடா வகைதான் மகிழ்ந்து எனக்கு அருளி-பிறவித்துன்பத்தால் நான் வருந்தா வண்ணம் மகிழ்வுடன் எனக்குக் கருணை செய்து; அணுவிற்கு அணுவாய்-அணு ஓர் அண்டம் என்னும்படி, அவ்வணுவிற்கு அணுவாகப் பரந்து வீற்றிருந்து; அப்பாலுக்கு அப்பாலாய்-அண்டம் ஓர் அணு என்னும்படி ஏழு அண்டங்களையும் கடந்து அதற்கும் அப்பால் பெரிதாய்ப் பரந்து வீற்றிருந்து; கணு முற்றி நின்ற கரும்பு-கணுக்கள் முற்றி நன்கு விளைந்த கருப்பஞ்சாறு போலும் பேரின்பத்தை; உள்ளே காட்டியும்-என்னுள்ளே அத்துவிதமாய் நின்று உணரச்செய்தும்; கருத்தினில்-என் உள்ளக் கருத்தின் கண்; கபால வாயில் காட்டி-தலை ஓட்டுத்துவாரத்தின் வழியே மேல் உள்ள துவாதசாந்த வெளியைப் புலப்படுமாறு காண்பித்து; இருத்தி-என்னைத் துவாதசாந்தத்தில் இருக்கச் செய்து; எனக்கு முத்தி இனிது அருளியும்-எனக்குச் சாலோக இன்பத்தை இனிமையாக நல்கியும்.

இருள் கடிந்து இருவினை தன்னை அறுத்து–ஆணவம், கன்மம், மாயை என்ற மும்மலங்களையும் போக்கி நல்வினை தீவினைப் பயன்களை முற்றிலும் கெடுத்து; முன்னை வினையின் முதலே களைந்து–முன் செய்த நல்வினை தீவினைகட்குக் காரணமாயிருந்த ஆணவமலப் பிணிப்பினை அகற்றி; என்னை அறிவித்து எனக்கு அருள் செய்து– என்னை அறிவு வடிவினன் என்று அறிவித்து எனக்குச் சாமீப இன்பத்தை நல்கியும்; வாக்கும் மனமும் இல்லா–பாசஞான, பசு ஞானங்களால் அறியப்படாது பதி ஞானத்தாலேயே இறைவன் அறியப்படுதலின்; மனோலயம் தேக்கியே–என் மனவெளியில் நீ நிறைத்திருந்து; என்றன் சிந்தை தெளிவித்து–அதனால் என் மனம் தெளிவித்து;

இருள் வெளி இரண்டுக்கும் ஒன்று இடம் என்ன–இருட்டைச் சார்ந்த போதும் வெளியாகிய ஒளியைச் சார்ந்த போதும் அவற்றின் மயமாய் அவ்விரண்டற்கும் கண் இடமானாற் போல; என் செவியில் அருள் தரும் ஆனந்தத்து அழுத்தியும்–என் செவியில் ஞானம் உணர்த்திச் சாரூப இன்பத்தில் என்னைத் திளைக்கச் செய்தும்; அருள்வழி காட்டி–அருள் வழியாகிய சன்மார்க்க நெறியை எனக்குக் காண்பித்து; அல்லல் களைந்து–அதனால் என் பிறவித்துயரை அகற்றி; எல்லை இல்லா ஆனந்தம் அளித்து–இறவாத சாயுச்சிய இன்ப உணர்வினை எனக்கு வழங்கியும்.

வேடமும் நீறும் விளங்க நிறுத்தி–மெய்யடியாரது திருவேடத்தையும், திருநீற்றையும் உலகில் நிலைத்திருக்கச் செய்து; கூடும் மெய்த்தொண்டர் குழாத்துடன் கூட்டி–ஒன்றுகூடி ஆனந்தக் களிப்படையும் மெய்யடியார் கூட்டத்தில் என்னையும் சேர்ந்தருளி; அஞ்சு கரத்தின் அரும்பொருள் தன்னை–அஞ்செழுத்தில் அடங்கியுள்ள அறிதற்கரிய பதிபசு பாச உண்மைகளை; நெஞ்சக் கருத்தின் நிலை அறிவித்து–எளியேனுடைய மனக்கருத்தில் நிலையாக விளங்குமாறு உணர்த்தியும்; தத்துவ நிலையைத் தந்து–உண்மையான நிலையை விளக்கி; எனை ஆண்டருள்–என்னை அடிமையாக ஆட்கொண்டருளிய; வித்தக விநாயகா–பேராற்றல் வாய்ந்த விநாயகக் கடவுளே! விரைகழல் சரணே–அருள் மணமுடைய நின் திருவடிகளே எனக்குப் புகலிடமாக உள்ளது.

சம்ஸ்கிருத பத்திரிகைளின் வரலாறு

எல்.அனிதா, எம்.ஏ.,
சம்ஸ்கிருத பண்டிதர்
சரசுவதி மகால் நூலகம்
தஞ்சாவூர்

ஆதி மனிதன் தங்களிடையே செய்திகளையும், கருத்துக்களையும் பரிமாறிக்கொள்ள சைகைகளைப் பயன்படுத்தினான். அதனைத் தொடர்ந்து பாறைகளிலும் சிறு குன்றுகளிலும் தங்கள் எண்ணத்தை வெளிப்படுத்தும் முகமாக அந்த அந்த பொருட்களின் வடிவங்களைக் குறியீடாக குறித்து வைத்தான். கால ஓட்டத்தில் குறியீடு எழுத்துக்களாகவும், ஒழுங்கு அமையப்பெற்ற எழுத்துக்கள் மொழிகளாகவும் உருவாயின.

பொருளைக் கொடுத்து, பொருளைப்பெறும் பண்டமாற்று முறையிலிருந்து நாணயம் தோற்றம் பெற்றது, கல்லிலும், செம்பிலும் வெட்டப்பெற்ற எழுத்துகள் பின்னர் ஓலைகளில் எழுதப்பெற்றன. காகிதம் கண்டுபிடிக்கப்பட்ட அக்காலகட்டத்தில் அச்சு இயந்திரம் உருவாக்கப்பட்டது. பின் புதிய புதிய செய்திகளைத் தாங்கி நூல்கள் வெளிவந்தன. அச்சு நூல்கள் தொடர்ந்து, அன்றாட நிகழ்வுகளை தெரிவிக்கும் முகமாக செய்திதாள்கள் ஐரோப்பிய நாடுகளில் வெளிவரத் தொடங்கின.

18ஆம் நூற்றாண்டுகளில் நம்நாட்டின் விடுதலைப் போரில் பங்கு கொண்டவர்களாலும், சமூக சீர்திருத்தவாதிகளாலும், முற்போக்கு சிந்தனைகள் கையெழுத்துப் பிரதிகளாகவும் மக்களிடையே உலாவந்தன. ஐரோப்பிய கண்டுபிடிப்புகளும் நவீன சிந்தனைகளும் மக்களுக்கான பத்திரிகைகளை கொண்டுவரசெய்தன. அந்தவகையில் இந்தியாவில் வெளி வந்த "பெங்கால் கெசட்" காந்தியின் "யங் இந்தியா" "சுதேசமித்திரன்" போன்ற நாளேடுகள் குறிப்பிடத் தகுந்த பத்திரிகைகளாகும். இவைகளின் பரிணாம வளர்ச்சியாக வாராந்திர ஏடுகளும் மாதஇதழ்களும் வெளிவந்தன. இன்று உலகெங்கும் பல்வேறு மொழிகளில் பல்வேறு பொருட்களை உள்ளடக்கி பல்லாயிரம் இதழ்கள் வெளிவந்து கொண்டிருக்கின்றன.

அவ்வகையில் வடமொழியில் தோன்றிய பத்திரிகைகளில் குறிப்பிடத்தகுந்த சில பத்திரிகைகளின் செய்திகளை இக்கட்டுரையில் காண்போம்.

சம்ஸ்கிருத பத்திரிகைளின் வரலாறு பற்றிய கருத்துக்களை சம்ஸ்கிருத்தில் ப்ரா.க்ரு.த. பாண்டுரங்கன் என்பவர் வெளியிட்டுள்ளார். அதனை எல்லோரும் அறிந்து கொள்ளும் வகையில் தமிழாக்கம் செய்து இங்கே சமர்ப்பிக்கப்படுகிறது.

பத்திரிகையில் வார பத்திரிகை, மாதபத்திரிகை என்று பல பத்திரிகைகள் குறிப்பிடப்பட்டுள்ளன. அவற்றை அகர வரிசைப்படி இனிச்சிறிது பார்ப்போம்.

அவையாவன:-

1. அமரபாரதி
2. உத்யானபத்ரிகா
3. காசீவித்யாஸுதாநிதி:
4. பவிதவ்யம்
5. பாரதி
6. மதுரவாணி
7. மித்ரகோஷ்டீ பத்ரிகா
8. மைசூரு சம்ஸ்க்ருத மஹாபாடசாலா பத்ரிகா
9. வித்யோதய:
10. விக்ஞான சிந்தாமணி:
11. ஸஹ்ருதயா
12. ஸத்தர்ம:
13. சம்ஸ்க்ருத சந்திரிகா
14. சம்ஸ்க்ருத ரத்னாகர:
15. சம்ஸ்க்ருத சாஹித்ய பரிஷத்பத்ரிகா
16. சம்ஸ்க்ருதம்

17. ஸம்ஸ்க்ருத ப்ரதிபா

18. ஸம்வித்

19. ஸூக்திஸுதா

20. ஸூந்ருதவாதிநீ

21. ஸூர்யோதய:

காசீவித்யாஸுதாநிதி:

இப்பத்திரிகை அறிந்த வகையில் "பண்டித பத்திரிகா" என்பது மறுபெயர் கொண்ட சம்ஸ்கிருதம், மற்றும் ஆங்கிலம் முன்முதலாக வெளிவந்த பத்திரிகையாக விளங்குகிறது. 1861ல் ஜுன் மாதம் வாரணாசியில் ஆரம்பிக்கப்பட்டது. அச்சில் வராத பல சமஸ்கிருத நூல்களில் வெளியிடுவதால் இப்பத்திரிகையில் பழமையான காவியங்கள், நாடகங்கள், சம்பூ கிரந்தங்கள் முதலியவையும் நியாய, வியாகரணம், மீமாம்ஸம் முதலிய சாஸ்திரங்களில் இருந்து பல விஷயங்களை ஆய்வு செய்து தொடர்ச்சியாக இப்பத்திரிக்கை வெளியிட்டது. இதில் வெளியிட்ட பல நூல்கள் மறுபதிப்பாக வெளியிடப்படும் நிலையிலும் இப்பத்திரிக்கை ஆற்றிய சமஸ்கிருதமொழி கொண்டு போற்றத்தக்கது. பாரததேசத்தினர் ஆராய்ச்சி கட்டுரைகளும், மேல்நாட்டவர் கட்டுரைகளும் இதில் இடம் பெற்றுள்ளன.

ஸூக்தி ஸுதாயிஷ்தீமிதீ

வாரணாசி க்ஷேத்திரத்தில் வசிக்கும் பவானி பிரசாதசர்மா அவர்களின் தலைமையில் 1961ல் விக்ரம வருடத்தில் சூக்தி-சுதா என்ற பெயருடைய காப்பிய வடிவிலான மாத பத்திரிகை வெளியிடப்பட்டு வந்தது. இப்பத்திரிகையில் பழமையும், புதுமையும் வாய்ந்த ரசம் ததும்பிய கவிதைகள், ஒவ்வொரு மாதமும் வெளியிடப்பட்டன. கவிதை என்பதே சமஸ்கிருத மொழியின் சிறப்பு எனவே கவிதை எழுதும் திறமையை ஊக்குவிப்பதிலேயே இப்பத்திரிக்கை ஈடுபாடு கொண்டு இருந்தது.

இப்பத்திரிக்கையில் தலைப்புகள் சுருக்கமாகவும், சுவையானதாகவும் இருந்தன. இதே நோக்கில் "பத்யவாணி" என்ற பத்திரிகையும் நடத்தப்பட்டு வந்தது.

வித்யோதய:

வங்கதேசத்தில் உள்ள பட்டபள்ளி என்னும் கிராமத்தில் பிறந்த ஸ்ரீரிஷிகேச சாஸ்திரிகளால் "**வித்யோதய:**" என்ற பெயர் பெற்ற ஸம்ஸ்கிருத மாதபத்திரிகை கி.பி. 1870ல் ஆரம்பிக்கப்பட்டது. ஸ்ரீரிஷிகேச சாஸ்திரிகள் சமஸ்கிருத மொழியிலும், ஆங்கிலமொழியிலும் திறன் மிக்கவராக இருந்தார். எனவே அவரது சைலி சமஸ்கிருதத்தின் அழகையும், ஆங்கிலமொழியின் சிறப்பையும். இணைந்து வழங்கியது. அவரது சமஸ்கிருத சைலி பண்டிதர் அறிய கூடிய சமாஸங்கள் மிக கடினமான பதப்ரயோகங்கள், முதலியவை அற்றதாக எளிய பதங்களுடன் கூடியதாகவும் மொழி வழக்கில் உள்ள பிரசித்தமான பதங்களைக் கொண்டதாகவும், தெளிவான பொருளைக் கொடுக்ககூடிய தன்மை கொண்டதாகவும் சிற்றறிவு படைத்தவர்களுக்குப் பயன் தரக்ககூடியதாகவும் அமைந்தது.

"**உத்பிஜ்நபரிஷத்**", "**ஆத்மவாயோருத்கரா:**", "**ஸம்பாதகாய லிகிதமநாத்மிகாபத்ரம்**" ஆகிய பிரபந்தங்கள் ஸ்ரீரிஷிகேச சாஸ்திரிகளின் அறிவின் சிறப்பை வெளிப்படுத்துகின்றன. இருபக்கமும் கூரான கத்தி வீச்சுப்போல் சாஸ்திரிகளின் பேனா கிண்டலாகவும், தக்க முறையிலும் மூடப்பழக்க வழக்கங்களில் பற்றுகொண்டு மற்றவற்றை ஏற்காத நற்பழக்கங்கள் ஈடுபாடு அற்ற மக்களின் அறியாமையை நீக்குகிறது. மேலும் சமஸ்கிருத மொழியின் சிறப்புகளை பறை சாற்றுவதாகவும் அமைகிறது.

இப்பத்திரிகை சிலகாலம் சாஸ்திரிகளும், சில காலம் லண்டன் நகரத்தில் உள்ள "ஓரியண்டல் நேபிலிட்டி இன்ஸ்டிடியூட்" என்ற பெயர் கொண்ட சபையினராலும் பிறகு சாஸ்திரி அவர்களின் பிள்ளையாலும் ஐம்பது வருடங்கள் வரை நடத்தப்பட்டு வந்தது என அறியப்படுகிறது.

விக்ஞான சிந்தாமணி

வித்யோதய பிறகு 1888ல் கேரளத்தை சேர்ந்த "பட்டாமணி" என்ற பெயர் பெற்ற நகரத்தில் இருந்து "**விக்ஞான சிந்தாமணி**" என்ற இப்பத்திரிக்கை வெளிவந்தது.

இப்பத்திரிக்கையில் அறநெறி பற்றியும், கலாசாரத்தைப் பற்றியும், கட்டுரைகள் வெளியிடப்பட்டன. கொடுக்கப்பட்ட குறிப்புகளைக் கொண்டு பாடல்களை அமைக்கும் சமஸ்யா பூர்த்தி போட்டிகளும் வெளிவந்தன. பாரத தேசத்தில் பலதிசைகளில் இருந்தும் எழுதப்பட்ட மனதை கவரும் சமஸ்யா பூர்த்தி இதில் வெளிவந்தன.

சமஸ்கிருத சந்திரிகா

19ஆம் நூற்றாண்டின் இறுதியில் சமஸ்கிருத பத்திரிகையின் "வானில் புதுசந்திரன்போல்" இப்பத்திரிகை உருவெடுத்தது. இப்பத்திரிகையால் சம்ஸ்கிருத

உலகே அழகிய நில ஒளியால் பத்து திசைகளும் பிரகாசம் அடைந்தது. முதலில் ஸ்ரீஜயசந்திர சித்தாந்த பூஷணன் பட்டாசார்யா, முதலிய வங்க தேசத்து அறிஞர்களால் இப்பத்திரிகை ஆரம்பிக்கப்பட்ட போதிலும் ஸ்ரீராசிவேடகர், அப்பா சாஸ்திரி பெரியவரால் கரவீரபுரத்திற்கு கொண்டு வரப்பட்டு அங்கிருந்து வெளிவந்தது.

அப்பா சாஸ்திரிகளின் சைலி, பாணபட்டரின் பொருள் செறிவையும், தண்டியின் பதம் எளிமையையும், பதஞ்சலியின் கேள்வி பதில் திறமையையும், ஸ்ரீசங்கராசார்யரின் மிடுக்கான நடையும், காளிதாஸனின் மதிமயக்கத்தை கொண்டதாக ரசிகர்களையும், தார்கிகர்களையும், தர்சன சாஸ்திரங்களை அறிந்தவர்களையும், வியாகரண, மீமாம்ஸ, சாஸ்திரங்களை அறிந்தவர்களையும் வெகுவாக கவர்ந்தது.

இணையில்லாத இந்த சமஸ்கிருத செய்தி தொடர்ந்து இருந்ததால் சமஸ்கிருத மொழியில் புதிய சாகித்ய பரம்பரை ஏற்பட்டு இருக்கும்.

சூந்ருதவாதினீ

அப்பா சாஸ்திரிகள் சில காலங்களுக்கு பிறகு சூந்ருதவாதினீ என்ற ஸம்ஸ்கிருத வார பத்திரிகை ஆரம்பித்தார். இதுவே சமஸ்கிருத வாரபத்திரிகை ஆகும். சமூக, அரசியல், கல்வி தொடர்பான விஷயங்களில் சுதந்திரமான அறிஞர்களால் தனது அபிப்ராயங்களை ஸம்ஸ்க்ருத மொழியில் வெளியிடுவதற்கும் இந்நாளைய விஷயங்களில் தனது அபிப்ராயத்தை சமஸ்கிருத சொற்களின் தட்டுபாடின்றி வெளியிட முடியும் என்பதற்கு இவ்வார இதழே எடுத்துக்காட்டாகும்.

ஸஹ்ருதயா

அச்சிட்டு வெளிவந்த பத்திரிகைகளுள் தெளிவைப் பொருத்த வகையில் சமஸ்கிருத சந்திரிகாவைக் காட்டிலும் "ஸக்ருதயா" என்ற பத்திரிக்கை அதிகமாகவே வெற்றி அடைந்தது. ஐம்பது வருடங்களுக்கு முன்பாகவே கீலகவருடத்து சித்திரை மாதத்தில் ஸ்ரீரங்க க்ஷேத்திரத்தில் ஸ்ரீகிருஷ்ணமாசாரியரின் தலைமையில் ஆரம்பிக்கப்பபட்ட இந்த ஸஹ்ருதயா பலவித விஷயங்களுடன் காலம் தவறாமல் வெளிவந்ததால் தென்னிந்தியாவில் மிக முக்கியமான பத்திரிகையாக விளங்கியது.

இதில் சமஸ்கிருத சந்திரிகையில் சம்பாதகர்களின் கட்டுரைகளே காணப்பட்டன. ஆனால் ஸஹ்ருதயாவில் பல எழுத்தாளர்களால் எழுதப்பட்ட பல சுவைகளைக் கொண்ட, பல நடைகளைக் கொண்டு, பல கட்டுரைகள் காணக்கிடைக்கின்றன. அக்காலத்திய பல அறிஞர்களின் காவியப் படைப்புகளையும் விவாத திறமையையும் பரந்த அறிவையும் இப்பத்திரிகையில் கண்டுகொள்ளலாம்.

மித்ரகோஷ்டி பத்திரிகா

கி.பி. 1920ல் காசியில் இருந்து “ஸ்ரீவிதுரசேகர பட்டாசாரியரின்” தலைமையில் “மித்ரகோஷ்டி” என்ற பெயருடைய இப்பத்திரிகை வெளிவந்தது. இதிலும் அறிவு, இதிஹாஸம், சாகித்யம், வேங்கடசரித்திரம் இவற்றை விமர்சித்து பலவகையிலும் சிறந்த கட்டுரைகள் வெளிவந்தன. மிகச்சிறந்த பண்டிதர்களால் நன்கு பரிசோதிக்கப்பட்ட கட்டுரைகள் இதில் எழுதப்பட்டன. இப்பத்திரிகை மிகவும் பிரபலமாக இருந்தது.

கேதாரீஸ்வர விரதம்*

D.ரவி.M.A. M.Phil, B.Ed.,

தெலுங்கு பண்டிட்
சரசுவதி மகால் நூலகம்
தஞ்சாவூர்

பொன் ஆபரணங்களாக ஜொலிக்க கூடிய மலையாக இருக்கும் 'கைலாச மலை'யில் கேதாரி என சொல்லப்படும் ஒரு சிறந்த இடம் இருக்கிறது. அந்த மலையில் பார்வதி பரமசிவனும் இருக்கும்போது பிரம்மா, விஷ்ணு, தேவர்கள் முதலான மூன்று கோடி தேவர்கள், 48 ஆயிரம் ரிஷீஸ்வர்கள், கின்னர, கிம்புருஷ, கருட, கந்தர்வ, சித்த வித்தியாதர, தும்புரு, நாரதர்களும் பாட்டுப்பாட ஊர்வசி, திலோத்தமை, மேனகா, மற்றும் ரம்பைகள் நடனம் ஆடும் வேளையில் நந்திகேஸ்வரன், (ப்ருங்கி) சிவனின் த்வாரபாலகர் போல் வேடம் தரித்து நகைச்சுவை செய்து பரமேஸ்வரனைச் சந்தோஷப்படுத்தினான்.

பரமேஸ்வரன் நந்திகேசனை அழைத்து நீ எங்களைச் சந்தோஷப்படுத்தியதால் உனக்கு வேண்டிய வரம் கேள்: தருகிறேன் என்று சொன்னார். நந்திகேஸ்வரன் சந்தோஷப்பட்டு, பார்வதி பரமேஸ்வரன் இருவரும் இருக்கும் பொழுது, பரமேஸ்வரனை மட்டும் வணங்கி நின்றான். அப்போது பார்வதிதேவி, தேவசபையில் எல்லோர் முன்னிலையிலும் தன்னை அவமானம் செய்தான் என்று எண்ணி கோபத்துடன் நந்திகேஸ்வரனுக்கு சாபம் விட்டாள் பார்வதி. பரமேஸ்வரன் ஏன்? சாபம் கொடுத்தாய் என்று வினவியவாறு, மோக்ஷம் வேண்டும் என்று நினைத்து, என்னை வேண்டினானே தவிர ஐஸ்வரியம் வேண்டுமென்றால், உன்னை வேண்டி இருப்பான் அல்லவா? என்றார். பார்வதிதேவி கோபத்துடன் எழுந்தாள். மகேஸ்வரன் சபையை நிறுத்தி விட்டு, பார்வதிதேவி பரமேஸ்வரனிடம் வணங்கி நின்று, உங்கள் சரீரத்தில் என்னை பாதியாக சேர்த்துக் கொள்ளும்படி வேண்டினாள். அதற்கு பரமேஸ்வரன், 'கௌதமரிஷியிடம்' சென்று இந்நிலையை அவரிடம் கூறி ஆலோசித்து வா என்றனுப்பினார். பரமேஸ்வரனின் ஆணைப்படி பார்வதிதேவி கௌதமரிஷி இருக்கும் ஆசிரமத்திற்கு சென்றாள்.

---

* Ms.No. 760 (c) கேதாரிவிரதம்., சரசுவதி மகால் நூலகம், தஞ்சாவூர்.

அச்சமயம் கௌதமரிஷி குளித்துவிட்டு வரும் வழியில், மரங்கள் எல்லாம் துளிர்ந்து, புஷ்ப வகைகள் எல்லாம் பூத்துக்குலுங்கின. பாம்பும், கீரிப்பிள்ளையும் ஒன்றாக கூடி இருந்தன. அந்த நேரத்தில் புலியும் குளத்தில் தண்ணீர் குடித்துக்கொண்டு இருந்தன. இந்த வினோதமான காட்சியை பார்த்துவிட்டு என்ன காரணமென்று தெரியவில்லையே என நினைத்துக்கொண்டு ஆசிரமத்துக்கு வந்தார்.

பார்வதிதேவி தன் எதிரில் வணங்கி நிற்பதை பார்த்து "மனோசித்திரஸ்து" என்று ஆசிர்வாதம் செய்து, பார்வதிதேவியிடம் வந்த காரியம் என்ன? என்று கௌதமரிஷி கேட்டார். பரமேஸ்வரன் சபையில், அனைத்து தேவர்கள், ரிஷிகள், வந்திருக்கும் நேரத்தில் நந்திகேஸ்வரன் ப்ருங்கிவேடம் தரித்து நடனமாடி பரமேஸ்வரனை சந்தோஷப்படுத்தினான். அப்போது பரமேஸ்வரனும் மிக சந்தோஷத்தோடு உனக்கு வேண்டிய வரத்தை கேள் என்றார். அந்த நேரத்தில் பரமேஸ்வரனும், நானும் ஆசனத்தில் அமர்ந்திருந்த போது என்னை விட்டு விட்டு பரமேஸ்வரனை மட்டும் வணங்கினான் நந்திகேஸ்வரன். அச்செய்கையினால் சபையினர் முன் எனக்கு அவமானயிற்று. இதனை நினைத்து பரமேஸ்வரரிடம் தங்களின் சரீரத்தில் சரிபாதி என்னை சேர்த்துக் கொள்ளும்படி வேண்டினேன். அதற்கு பரமேஸ்வரன் தங்களிடம் விஷயத்தை கூறி ஆலோசித்துவிட்டுவா என்றனுப்பினார்.

பார்வதிதேவியின் நிலையை அறிந்த கௌதமரிஷி ஒரு உபாயம் இருக்கிறது கேள். விரதங்களுக்கெல்லாம் சிறந்த விரதம் **'கேதாரீஸ்வர விரதம்'***. இந்த விரதத்தை செய்தால் மனதில் நினைத்தகார்யங்கள் நிறைவேறும். அத்தகைய விரதத்தை நீ செய்தால், உன் எண்ணம்போல் பரமேஸ்வரனின் சரீரத்தில் ஐக்கியமாகலாம் என்று கூறினார்.

பார்வதிதேவி கௌதமரிஷியிடம், இந்த விரதத்தை எப்போழுது செய்யவேண்டும்? எப்படி செய்யவேண்டும்? அதன் முறைகளையும் கூறும்படி கேட்டாள். அதற்கு அவர் ஐப்பசி மாதம், அமாவாசை முதல் பௌர்ணமி தசமி வரை, 21 நாட்கள், இந்த விரதத்தை செய்தால், மனதில் நினைத்தகாரியம் நிறைவேறும் என்று கூறி, கௌதம ரிஷி முன் காலத்தில் இந்த விரதத்தை செய்தவர்களுக்கு என்னென்ன காரியங்கள், நிறைவேறியது என்பதை கதையாக பார்வதிதேவியிடம் விவரிக்கிறார்.

ஹுஜினி என்னும் பட்டணத்தில் தனவந்தன், கோமுட்டி செட்டியார் என்ற

---

*கேதாரம்:- இயமமலையில் உள்ள ஒரு சிகரத்தின் பெயர் கேதாரமாகும். அங்கு ஒரு சிவலிங்கமாக அவதரித்துள்ளார், மகேஸ்வரன்.

ஒருவன் இருந்தான். அவனுக்கு இரண்டு மகள்கள் பிறந்தனர். அவர்கள் புண்ணியவதி, பாக்கியவதி. இப்பெண்கள் மிக சீரும் சிறப்பாக, செல்வசெழிப்புடன் வளர்ந்தனர். ஓர் நாள், அந்தப்பட்டணத்தில் தேவகண்ணிகள் கேதாரிவிரதம் செய்தார்கள். அவர்களைப் பார்த்து, நாமும் இந்த விரதத்தை செய்ய வேண்டுமென்று, செட்டியாரின் மகள்கள் இருவரும், இந்த விரதத்தை செய்ய ஆரம்பித்தார்கள்.

கருட எனும் ஆற்றின் கரையில் குளித்துவிட்டு, மண்கலசம் வைத்து, ஆலமர இலையை வெற்றிலையாகவும், ஆலமரபழங்களை பாக்காகவும் நினைத்து படைத்தார்கள். அம்மனுக்கு பூஜை செய்து இந்த விரதத்துக்கு பலகாரங்கள், நைவேத்தியங்கள் கொண்டு ஆராதனை புரிந்தனர். அந்த ஆலமரத்தின் வேர்களை 21முடி போட்டு, அதையே மந்திரதாயத்தாகக் கட்டிக்கொண்டார்கள். அந்த மகேஸ்வரன் கிருபையோடு, நல்ல ஐஸ்வரியம் படைத்த கணவன் வேண்டுமென்று பிரார்த்தனை செய்தார்கள்.

புண்ணியவதிக்கும் மதுரபுரி பட்டணத்திற்கு நாயகனாக இருக்கும் ராஜாவுக்கும் திருமணம் நடைபெற்றது. நல்ல ஐஸ்வர்யங்களோடு வாழ்ந்து வந்தாள். பாக்கியவதிக்கும், சோழநாட்டு இளவரசனுக்கும் திருமணம் நடைபெற்றது. அவளும் நல்ல செல்வங்களுடன் வாழ்ந்து வந்தாள். அவ்விருவரில் புண்ணியவதி செல்வசெழிப்பாக இருந்தாலும் கேதாரிவிரதத்தை விடாமல் அனுசரித்து வந்தாள்.

பாக்கியவதியும் செல்வசெழிப்புடன் இருக்கும்போது, மகேஸ்வரன் கிருபையால் பாக்கியவதி கர்ப்பமானாள். கேதாரிவிரதத்தை மறந்துபோனாள். இந்த விரதத்தை உதாசீனம் செய்தால், இளவரசனின் வெறுப்புக்கு ஆளாகி காட்டுக்கு அனுப்படுகிறாள்.

